ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2387/26 - 2024 ජුනි මස 05 වැනි බදාදා - 2024.06.05

2387/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சங்கங்கள் கட்டளைச் சட்டம்**

சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 123) 3 மற்றும் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண ஆகிய நான், இந்த அறிவித்தல் மூலம் -

1. கட்டளைச் சட்டத்தின் தத்துவங்கள் மற்றும் வசதிகள் வரையறுக்கின்ற நோக்கங்களுக்கிணங்க இல. 183ஏ, நெழும்வில விஹாரய, சியபலாகொட, பொல்கஸ்சோவிட என்ற முகவரியில் அமைந்துள்ள "சியபலாகொட நெலும்வில விஹாரஸ்த ஆகமிக ஹா சுபசாதன சமிதிய" என்ற பெயரைக் கொண்ட சங்கத்தின் நோக்கங்களுக்கு அதிகாரமளிக்கின்றேன் என்றும்,

2. அக்கட்டளைச் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து விடுவிப்பளித்து அக்கட்டளைச் சட்டத்தின் பிரயோகத்தை வரையறுக்கிறேன்.

வைத்தியர் **ரமேஷ் பத்திரண**,
கைத்தொழில் அமைச்சர்.

கைத்தொழில் அமைச்சு,
இல. 73/1, காலி வீதி,
கொழும்பு 03,
2024, மே 22.

EOG 06 - 0028